12.03.2026

## கருணை கொலை செய்ய உச்ச நீதிமன்றம் அனுமதி

- ஹரிஷ் ராணாவின் உடல் நிலையை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட முதல்நிலை, 2-ம் நிலை மருத்துவக் குழுக்களும் உயிர்காக்கும் கருவிகளை விலக்க பரிந்துரைத்த பிறகு, நீதிமன்றம் தலையிட வேண்டிய அவசியம் எழவில்லை.
- இருப்பினும் முதல் நிகழ்வு என்பதால், நோயாளிக்கு பொருத்தப்பட்ட உயிர் காக்கும் கருவிகளை கண்ணியத்துடன் விலக்க வேண்டும்.
- முதல்நிலை, 2 ஆம் நிலை மருத்துவக் குழுக்கள் பரிந்துரைத்து, இதுபோன்ற உயிர் காக்கும் கருவிகளை விலக்கி கருணைக் கொலை செய்யக் கோரும் விவகாரத்தில், காமன் காஸ் வழக்கின் தீர்ப்பின் வழிகாட்டுதல்களை பின்பற்றி மருத்துவமனைகளிடம் இருந்து தகவல்களைப் பெற வேண்டும் என்று அனைத்து நீதித்துறை நடுவர்களுக்கும் உயர் நீதிமன்றங்கள் உத்தரவிட வேண்டும்.
- கருணைக் கொலை விவகாரத்தில் பரிந்துரைகளை அளிக்க அனைத்து மாவட்டங்களிலும் முதல்நிலை, 2-ம் நிலை மருத்துவக் குழுவுக்குப் பதிவு பெற்ற மருத்துவர்களின் பட்டியலை மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி பராமரிப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.
- கருணைக் கொலை விவகாரத்தில் மத்திய அரசு விரிவான சட்டம் இயற்ற பரிந்துரைக்கிறோம்.

**கருணை கொலையில் 2 வகை**

- குணப்படுத்த முடியாத நோயால் நீண்டகாலம் அவதிப்படும் நோயாளியை, அவருக்கு வழங்கப்படும் உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை நீக்குவதன் மூலம் அல்லது மருத்துவ சிகிச்சைகளை நிறுத்துவதன் மூலம் தாமாக உயிரிழக்கச் செய்வது 'பாசிவ் யூதனேசியா' எனப்படும்.
- நோயாளிகளை நோயிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கும் வகையில் உயிரிழக்கச் செய்யும் மருந்தை ஊசி மூலம் மரணமடையச் செய்வது 'ஆக்டிவ் யூதனேசியா'. மற்றொரு வகை கருணைக் கொலையாகும்.
- இந்த நடைமுறை இந்தியாவில் சட்ட விரோதமாக கருதப்படுகிறது.

## முதியோர் நலனுக்கு முன்னுரிமை அளிப்போம்!

- இந்தியாவில் 60 வயதைக் கடந்த மூத்த குடிமக்களின் எண்ணிக்கை 2011 நிலவரப்படி 10 கோடியாக இருந்த நிலையில், 2036இல் அது இரண்டு மடங்கு அதிகரித்து 23 கோடியைத் தொடும் என மக்கள்தொகைக் கணிப்பு அறிக்கையில் (Technical Group on Population Projections) கூறப்பட்டுள்ளது.
- இதன்படி, 10 ஆண்டுகள் கழித்து இந்திய மக்கள்தொகையில் 15 சதவீதத்தினர் அதாவது, ஏழு பேரில் ஒருவர் 60 வயதைக் கடந்தவராக இருக்கும் நிலை ஏற்படும்.
- அதேபோல, சுகாதாரம் - குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில் வயது முதிர்வு குறித்து எடுக்கப்பட்ட நீண்டகால ஆய்வின்படி,2050இல் இந்தியாவில் முதியோரின் எண்ணிக்கை 31 கோடியாக உயரும் எனத் தெரியவந்துள்ளது.
- இந்த அசாதாரண உயர்வு, முதியோருக்கான சமூகப் பாதுகாப்பு வாழ்வாதார உரிமைகள், மருத்துவச் சேவை, நலத்திட்டங்கள் போன்றவற்றின் அவசியத்தை உணர்த்தியிருக்கிறது.
- ஒருபக்கம் நாட்டின் மொத்தக் கருவள விகிதம் குறைந்திருக்கும் நிலையில், மறுபக்கம் முதியோர் எண்ணிக்கை உயர்ந்திருப்பது கவனிக்கத்தக்கது.
- வயதுவாரியான மக்கள்தொகையில் சமச்சீரின்மை நிலவும் அதேநேரம், மூத்த குடிமக்களின் எண்ணிக்கை உயர்வும் நாடு முழுவதும் சீராக இல்லை.

SURESH

- எடுத்துக்காட்டாக, கேரளத்தில் 2011இல் 13 சதவீதமாக இருந்த முதியோர் எண்ணிக்கை 2036இல் 23 சதவீதமாக உயரும்.
- இதன் மூலம் நாட்டிலேயே மிக அதிக எண்ணிக்கையில் முதியோரைக் கொண்ட மாநிலமாக கேரளம் மாறும்.
- இமாச்சலப் பிரதேசம், பஞ்சாபைத் தவிர்த்துப் பெரும்பாலான வட இந்திய மாநிலங்களில் முதியோர் எண்ணிக்கை குறைவு.
- இந்தியச் சமூகம், முதியவர்களுக்கு மதிப்பளிக்கும் சமூகம் என்று சொல்லப்பட்டாலும், புறக்கணிப்புகளுக்கும் அவமதிப்புகளுக்கும் குற்றச்செயல்களுக்கும் முதியோர் இலக்காவது தொடர்கிறது.
- இத்தகைய சூழலில், முதியோர் நலத்திட்டங்களை முழுவீச்சில் அரசுகள் மேம்படுத்த வேண்டும்.
- அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அரசின் கடமை மட்டுமல்ல; சமூகத்தின் பொறுப்பும்கூட.
- முதியோரில் பாலின விகிதம் 1,065 பெண்களுக்கு 1,000 ஆண்கள் என்கிற அளவில் இருக்கிறது.
- இவர்களில் 54% பெண்கள் கணவரை இழந்தவர்கள். பொதுவாகவே, ஆண்களை நம்பி வாழும் வகையில் பெண்கள் இருக்கிற சூழலில், தனித்து வாழும் பெண்களின் நிலை கவலைக்குரியதாக மாறுகிறது.
- தனிக்குடும்பங்கள் பெருகிவிட்ட நிலையில், பெரும்பாலான முதியோர் தனித்து வாழும் நிலையே நீடிக்கிறது.
- இந்தியாவைப் பொறுத்தவரை வேலைக்குச் செல்லும் 100 பேரை 62 பேர் சார்ந்திருக்கிறார்கள்.
- இதையும் அரசுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- 2007இல் நிறைவேற்றப்பட்ட மூத்த குடிமக்களின் பராமரிப்பு – நலச் சட்டம், மாவட்டம்தோறும் முதியோர் இல்லங்களை மாநில அரசுகள் நடத்த வேண்டும் என்கிறது.
- ஆனால், பெரும்பாலான மாநிலங்களில் அது முறையாகச் செயல்படுத்தப்படவில்லை.
- தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதியோர் ஊக்கத்தொகை, மக்களைத் தேடி மருத்துவம், வீடு தேடி ரேஷன் பொருள்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கைவிடப்பட்ட முதியோருக்குத் தங்குமிடங்களை வழங்கும் பூஞ்சோலைத் திட்டம் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன.
- பயனாளர்கள் அனைவருக்கும் இவை எவ்விதத் தடையுமின்றிக் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

SURESH